மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பறாளை விநாயகர் பள்ளுவில் இலக்கணம்

## Rhetorical Grammar in Paralai Vinayakar Pallu

ரஜிதா அரிச்சந்திரன்/ Rajitha Arichandiran[1]
[1]Cultural development officer
Divisional Secretariat, Jaffna
Corresponding Email: aricharajitha19@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழத்திலக்கிய வரலாற்றில் ஒல்லாந்தர் காலத்தெழுந்த பள்ளுப் பிரபநதங்களுள் முக்கியமானதும் நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்டதுமான பறாளை விநாயகர் பள்ளானது பறாளை வாழ் ஐங்கரனை தலைவராக கொண்டு மருத நிலங்களில் வேலையாட்களாக இருந்த பள்ளர்களின் வாழ்க்கை முறையை பாடுபொருளாக கொண்டு இயற்றப்பட்டது. இவ்விலக்கியம் யாப்பிலக்கணம்,அணியிலக்கணம் பிசகாத பாடல்களை அள்ளித்தந்துள்ளது. பாடலுக்களிற்கு அழகு சேர்க்கும் வகையில் அணிஇலக்கணத்தின் சொல்லணி பொருளணி ஆகியவற்றில் பொருளணிகளில் உவமை அணி,உருவக அணி ,தற்குறிப்பேற்ற அணிகளை கையாண்டு பாடல்களை மெருகேற்றியுள்ளமை சிறப்பாகும். அத்துடன் சொல்லணிகளான எதுகை ,மோனை போன்றவற்றினையும் சிறப்பாக இணைத்து பாடல்களை ஆக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து யாப்பிலக்கணத்தில் பா, பாவினங்கள் ,இசைப்பாடல்களை கையாண்டு செய்யுள்கள் படைக்கப்பட்டுள்ளது. பா வில் சிந்தியல்,நேரிசை வெண்பாக்களும் கலிப்பாவும் பாவினங்களில் விருத்தம், தாழிசை என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இசைப்பா வடிவமான சிந்துப்பாவும் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேற்குறிக்கப்பட்டுள்ள அணி யாப்பு இலக்கணங்களுக்கூடாக கடவுள் வாழ்த்து, நாட்டு நகர வர்ணணை, பள்ளியர் தோற்றம், பள்ளன்தோற்றம், வாழ்க்கை முறை, பண்ணையார் தோற்றம், ஊடல், கூடல், சக்களத்திச்சண்டை, இன்னஓரன்ன பலவும் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.இவ்வாய்வின் ஊடாக ஈழத்தில் தமிழிலக்கணத்தின் யாப்பிலக்கணம்,அணியிலக்கத்தின் பயன்பாடு குறித்தும் பள்ளுஎன்ற சிற்றிலக்கியத்தின் உருவமைப்பு குறித்தும் இந்த ஆய்வினூடாக ஆய்ந்து அறியக்கூடியதாக உள்ளது.

**கருச்சொற்கள்:** பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, யாப்பிலக்கணம், அணியிலக்கணம்

**Abstract**

Paralai Vinahyaka Pallu that was composed by a poet called Scholar Sinnathamby of Nallur during Dutch period, is one of the important literatures in the literary history of Ealam. It makes Lord Ainkaran worshipped in the village of Paralai as the hero and means the way of life of Pallar community working in agricultural lands. It gives plenty of lyrics with impeccable yapilakkanam and Aniyilakkanam. Yappilakkanam songs have been created using pa and musical songs. It is noteworthy that sindhial, straight venpas and kalippa have been used in the pa, virutham and talisai, and Sindhuppa, an musical form, has also, The above - mentioned team is a great greeter, city commentary, pallan appearance, pallar committee lifestyle, farm appearance,are recognised.

**Keywords:** Pallu, Paralaivinayakar Pallu, Prosodical, Rhetorical Grammar

**முன்னுரை**

தமிழிலக்கிய வரலாற்றில் மன்னனும் மக்களும் செல்வச்செழிப்புடன் வாழ்ந்த காலங்களில் காவியங்கள் பல தோன்றி தமிழுக்கு அணிசேர்த்தன. வேற்றுமன்னர் படையெடுப்புகளுடன் வளங்குன்றிய வேளையில் சமயவழிப்பட்ட சிற்றிலக்கியங்கள் பெருவாரியாக தோற்றம் பெற்றன. இதனைப் பாரதியார் "காலத்திற் கேற்ற வகைகள் அவ்வ காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்" எனக் கூறியுள்ளார்.அவற்றில் நிலப்பிரபுத்துவ சமுதாய அடிப்படை நிலையை விளக்கும் பள்ளு இலக்கியம் கோயில் சார்ந்த சூழலைத் தமது களமாகக் கொண்டமைந்து. கி.பி பதினாறாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதமாற்றம் அமோகமாக நிகழ்ந்த காலப்பகுதியில் அடித்தட்டு மக்களாகிய மள்ளர் அல்லது பள்ளர் என்ற இனக்குழுவினரும் மதம் மாறவும் நிலவுடைமை சமுதாய கட்டமைப்பிலிருந்து விலகவும் தலைப்பட்டவேளை .இவ்விதமான சிந்தனையினை அவர்களிடம் உடைத்து அவர்களை நிலவுடைமையின் கீழ் வைத்திருக்க அவர்களைப் பாடுபொருள் ஆக்கி பாடப்பட்டதே பள்ளிலக்கியமாகும்.அந்தவகையில் ஈழத்திலக்கிய வரலாற்றுக்காலங்களில் ஒல்லாந்தர் காலத்தில் பறாளை விநாயகர் பள்ளு தோற்றம் பெற்றது. இது நல்லூர் சட்டநாதர் வீதியில் வாழ்ந்த புலவர் வில்வராசர் மகனான நல்லூர் சின்னத்தம்பி புலவர் அவர்களால் சுழிபுரம் பறாளையில் வீற்றிருக்கும் கண்ணைக்கோதி காக்கைப் பிள்ளையாரைப் பாட்டுடைத் தலைவராய்க் கொண்டு பறாளை வயல் நிலங்களில் வேலை செய்த மள்ளர் அல்லது பள்ளர் இன மக்களின் வாழ்வியல்சார் பிரச்சனைகளைச் சிருங்கார ரசம் மிக்கதாகவும், பள்ளிலக்கண முறை தவறாதும் பாடப்பட்டுள்ளது. இந்த பள்ளிலக்கியத்தில் பாடலை அமைக்கும் போது புலவர்கரால் கையாளப்பட்ட யாப்பிலக்கணம் பாடலுக்கு அழகைத் தரும் அணியிலக்கணங்களுளையும் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பறாளை விநாயகர் பள்ளின் அமைப்பு**

முத்தமிழையும் தன்னகத்தே கொண்டு படைக்கப்பட்ட பறாளை விநாயகர் பள்ளு கடவுள் வாழ்த்து, பள்ளியர் தோற்றம், பள்ளன் வருகை, நாட்டு வளங்கூறல், குயில் கூவுதல், மழைவேண்டல், ஆண்டையை வணங்கல், விதைவகை கேட்டல், மழை கேட்டல், ஆற்றின் வரவு, பண்ணைத்தலைவன் வரவு, பள்ளியர் முறையீடு, இளையாளை வெருட்டல், பள்ளன் வெளிப்படல், தொழுவில் மாட்டல், பள்ளி புலம்பல், மூத்தபள்ளி அடிசில் கொண்டுவரல், பள்ளன் மன்னிப்பு கேட்டல், பள்ளிமறுத்தல், அவன் சூழுறல், பள்ளனைமீட்க வேண்டி மூத்த பள்ளி பண்ணையிடம் வேண்டல், விதை காளை : மேல் காளை பாய்தல், பள்ளிகள் புலம்பல், பள்ளன் எழல், பண்ணைத்தலைவருக்கு அறிவித்தல், நாற்றுநடல், விளைந்த பிறகு செப்பஞ்செய்தல், நெல் அளித்தல், மூத்த பள்ளி முறையீடு பள்ளிகள் ஒருவருக்கொருவர் ஏசல், ஆகிய பகுதிகளைத் தன்னகத்தே கொண்டு இவற்றினூடாக பறாளைப் பதியில் வீற்றிருக்கும் விநாயகர் புகழையும் அடித்தட்டு மக்களின் வாழ்வியல் நிலையினையும் பள்ளிலக்கணம் சற்றும் பிசகாத வகையில் எடுத்தியம்புகிறது.

**பறாளை விநாயகர் பள்ளுவில் யாப்பிலக்கணம்**

தமிழின் ஐந்திலக்கணங்களில் யாப்பிலக்கணமும் ஒன்றாகும். "எழுத்து, சீர், அடி, எனும் அமைப்பில் குறித்த பொருள் நிறையுமாறு அமைத்தல் யாப்பாகும்'' என அகவுதல், துள்ளுதல், செப்பல், தூங்கல் ஆகிய ஓசைகளை வழங்கவல்லதாக அமைந்துள்ளது யாப்பிலக்கணம். அந்தவகையில் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா,என நான்கு வகைப்படும். இவற்றுடன் பாவினங்களாக விருத்தம், தாழிசை அமைகின்றன. மேற்குறிப்பிட்ட பாக்களில் நேரிசை வெண்பா இன்னிசை வெண்பா, விருத்தம், கலிப்பா ஆகிய யாப்புக்களில் அமைந்த பாடல்களும் சிந்திசைப்பாவால் அமைந்த பாடல்களாகவும் அமைந்துள்ளன. அந்தவகையில் வெண்பவானது செப்பலோசையில் மாச்சீர், விளச்சீர், காய்ச்சீரில் அமைந்து இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளையால் மிகவும் நேர்த்தியாக அமைந்த பாவாகும். வெண்பாவை வன்பா என்றும் அழைப்பார்கள் இது நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா, குறள் வெண்பா ஆகிய வகைகளைத் தன்னகத்தே கொண்டது. இதில் நேரிசை வெண்பா வடிவில் அமைந்த பாடல்கள் பறாளை விநாயகர் பள்ளுவில் அமைந்தள்ளன. காப்புப்பாடலாகிய,

"தொல்லுலகம் போற்றுஞ் சுழிபுரம்வா வைக்கின்றேன்
பல்வளஞ்சேர் பள்ளினிசை பாடலே_ வில்வழங்கு ....."

நேரிசை வெண்பாவிற்குரிய வெண்சீர் வெண்டளை இயற்சீர் வெண்டளை கலந்து இரண்டாவது அடியில் தனிச்சொல் பெற்றுப் பொருத்தமான எதுகையுடன் அமைந்துள்ளது. அடுத்து இன்னிசை வெண்பா பாடலும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. வெண்பா வடிவம் கடவுளைப்பாடுமிடங்களில் மட்டுமே பயன் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து கட்டளைக்கலித்துறை என்னும் பாவினத்தில் அமைந்த பாடல்களும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பாவினம் கலித்துறை வகையைச் சேர்ந்தது. தொடக்கம் நேரசையில் தோன்றினால் ஒற்றெழுத்துகளைத் தவிர்த்துஎண்ணும்போது பதினாறு எழுத்துகள் வருமாறும்; நிரையிசையில் தொடங்கினால் பதினேழு சொற்கள் வருமாறும் அமையும் ஒவ்வொரு அடியிலும் ஐந்து சீர்களைக் கொண்டதாகவும் நான்கு அடிகளைக் கொண்டும் மா:விளம்:காய் வாய்ப்பாட்டைப் பெற்றும் ஈற்றில் ஏகாரம் பெற்றும் முடிவதாகவும் அமையும். விளங்காய்ச் சீர் வராது. இந்த பாவினமும் மிக குறைவாகவே அமைந்துள்ளது. உதாரணமாகத் தலைவன் பொருள் வயிற் பிரிகையில் தலைவியின் துன்பத்தைத் தோழியின் கூற்றாய்க் கூறியுள்ளார்.

"சங்கத்தை ஏந்தும் பரஞ்சோதி நாதர் சயிலமின்னார்
புங்கத்தை வாய்த்த மணிநீலப் பார்வை பொலியுமுத்து
....." ப.வி.ப 105

அடுத்து கொச்சகம். இது கலிப்பா வகைகளுள் ஒன்று கலிப்பாவின் உறுப்புகள் முறைமாறியும் கூடியும் குறைந்தும் வருகின்றபோது அது கொச்சகம் ஆகின்றது. தரவு ஒன்றோ இரண்டே வந்தும் தாழிசை சிலவே பலதோ வந்தும் தரவு தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம்,ஆகிய உறுப்புகள் தம்முள் மயங்கியும் வெண்பாவினோடும் ஆசிரியத்துடனும் மயங்கி வந்து துள்ளலோசையுடன் கலித்தளையால்

இணைக்கப்படும் பாவாகும். மழை கேட்டல் பகுதியில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் கொச்சகப்பாடலாகவே அமைந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக,

“இருநிலத்து வேதியரும் ஏருழுவே ளாளர்களும்
பரிவினுடன் கடல்வருண பகவானைக் கண்டிறைஞ்ச்சி
விரிதிரைநீர் வளம்பெருக மேவுமுயிர்ப் பயிர்தழையத்
தருமமொடு தரைவிளங்கத் தந்தருளீர் மழையையெனறார்”

ப.வி.ப 64 பாடலைக் கூறலாம்.

தொடர்ந்து , விருத்தப் பாவினம். இது அறுசீர் விருத்தம், எழுசீர் விருத்தம்,எண்சீர் விருத்தம் எனும் வகைகளாக அமையும். இங்கு எழுசீர்விருத்தம் எண்சீர் விருத்தங்கள் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. எழுசீர்விருத்தம் முதலடி நான்கு சீராகவும் இரண்டாம் அடி மூன்று சீர்களாகவும் அமையும்; இதில் முதற்சீரும் ஐந்தாம் சீரும் மோனையால் ஒன்றியும் முதற்சீரும் எட்டாம் சீரும் எதுகையால் ஒன்றியும் அமையும். அடுத்து எண்சீர் விருத்தம் இது முதன் சீரும் ஐந்தாவது சீரும் மோனையாலும்; முதற்சீரும் ஒன்பதாவது சீரும் எதுகையாலும் ஒன்றி வரும். இவ்வாறான பாடல்கள் பறாளை விநாயகர் பள்ளுவில் மூத்தபள்ளி தோன்றல், இளைய பள்ளி தோன்றல், பள்ளன் தோன்றல், பள்ளியர் வரலாறு, நாட்டு நகர வளம் கூறல் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பாடல்கள் விருத்தப்பாவினத்திலேயே உள்ளன. உதாரணமாக,

கோட்டு வாரிச் நான்முகன் பேணிய
தும்பி மாமுக அம்புலி தாங்கிய ........”

என்ற சிவகாமி அம்மை வாழ்த்துப் பாடலை குறிப்பிடலாம். இவை சிந்துப் பாடல்கள்; மிகவும் எளிய பாடல்கள் சத்தம் அமைந்து கேட்போர் இன்புறும் வகையில் அமையும். ஏனைய பா மற்றும் பாவினம் பாடல்களை விட பறாளை விநாயகர் பள்ளுவில் அதிகமான பாடல்கள் அமைந்திருப்பது சிந்து இனமாகவே என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகைப் பாடல்கள் நாட்டார் மெட்டைச் சார்ந்தவை. இதை சமனிலை சிந்து வியனிலைச்சிந்து எனப்பிரிக்கலாம். சமனிலை சிந்து சமமான அடிகளால் அமையும் வியனிலை சிந்து அவ்வாறமையாது. இங்கு நாட்டு வளம் கூறல், குலமுறை கூறல், பண்ணைக்காரன் வருகை, ஆற்றின் வரவு, முகூர்த்தங்கேட்டல் எனப்பல பகுதிகள் சிந்துப்பாவாகவே அமைந்துள்ளன. உதாரணமாக,

பைப்ப ணிப்பகு வாய்ப்பட்ட திங்களிற்
பாரு மோதக் கடற்கரை தோறு
மிப்பி வாயிலின் முத்த முக்கிய
வீழ மண்டல நாடெங்கள் நாடே.

ப.வி.ப 16 என்ற பாடலை கூறலாம். மேற்போந்த வகையில் யாப்பிலகணத்தால் அமைந்த அற்புதமான பாடல்களைத் தன்னகத்தே கொண்டதாகப் பறாளை விநாயகர் பள்ளு அமைகின்றது.

**அணியிலக்கணம்**

பெண்ணுக்கு ஆபரணங்கள் அழகைச் சேர்ப்பதைப் போலப் பாடலுக்கு அணியிலக்கணம் அழகை சேர்க்கின்றது. அந்தவகையில் அணிகளைச் சொல்லணி, பொருளணி என இரண்டாக வகுக்கலாம் என்று இலக்கண நூல்கள் கூறுகின்றன. சொல்லணி என்பது எதுகை, மோனையினைக் குறிப்பதாகவும் பொருளணி என்பது உவமை, தற்குறிப்பேற்றம் முதலான அணிகளைக் குறிப்பதாயுள்ளது. அந்தவகையில் பறாளை விநாயகர் பள்ளுவில் அணியிலக்கணத்தின் இருவகையும், சிறப்பாக அமைக்கப்பட்ட அழகிய பாடல்கள் தமிழுக்கு அழகை சேர்க்கும் வகையில் சின்னதம்பிப் புலவரால் உருவாக்கப் பட்டுள்ளன.

பறாளை விநாயகர் பள்ளிலக்கியம் யாப்பு முறைக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளதால் இங்கு எதுகை மோனை என்பன இயல்பாகவே அமைந்துவந்துள்ளது. உதாரணமாக,

"கருமயி லாட குயிலினம் விடக்
கவியின மோடக் கரடிபுல்வாய்
பொருபுலி யாளித் திரள்மரை சாரற்....."

ப.வி.ப 70 என்ற பாடலில் முதற்சீரும் ஐந்தாவது சீரும் மோனையாலும் முதற்சீரும் எட்டாவது சீரும் எதுகையாலும் இணைந்து பாடலுக்கு அழகைக் கொடுக்கிறது. அடுத்து, பொருளணி நோக்குகையில், தெரிந்த பொருளைக் கொண்டு தெரியாத பொருளை விளக்கி பாடுவோருக்கு மனத்தில் பதிய வைக்கும் வகையில் உவமை அணியினை இலக்கியம் முழுதும் விதைத்துள்ளார் என்றே குறிப்பிட வேண்டும். அந்த அளவிற்கு இங்கு உவமையின் பயன்பாடு உள்ளது. பள்ளியரின் அங்கங்கள் குறித்த வருணனை, நாட்டு நகர வளம், பள்ளனின் வருணனை, நாற்றுநடல் போன்ற இடங்களில் அழகிய உவமைகள் அழகாகப் பின்னப்பட்ட உள்ளன. உதாரணமாக,

"கண்ண கன்ற வரைதலைச் செம்மணிக்
காந்தி தூயநந் தாவிளக் கோர் பால்" ப.வி.ப 8

என்ற பாடலடியில் மலைப்பகுதிகளில் ஒளிவீசும் மாணிக்க இரத்தினங்கள் தூண்டா விளக்கும்போது ஒளிரும் என்கிறார். இதைவிட பள்ளியர் தோற்றத்தில் பள்ளியின் மார்பகத்தை மலைக்குன்று போன்றதெனவும் "குத்து மலைக்குவடு.. பவி.ப 1 கோங்கிளம் புதிய முகை .."அதாவது மொட்டுப் போன்றதென்றும் "கோட்டு வருடிக் கொங்கை பெருக்கும் "யானைக் கொம்பு போன்ற மார்பகம் என்றும் இடையினை உடுக்குப் போன்றது "துடி நேரிடை" எனவும் வருணித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அடுத்து, நாட்டு வளம் குறித்துப் கூறுகையில் தற்குறிப்பேற்ற அணியினை கையாண்டு இயற்கை நிகழ்வுகளில் தன் கருத்தை ஏற்றி; மிக அழகாய்ப் பாடியுள்ளார் சின்னத்தம்பிப்புலவர்.

"தாற்று வாழை யிலைவென்று மாகத்
தரணி மேலால வட்ட மசை..."

அதாவது வாழை இலைகள் விரிந்தும் அகன்றும் இருப்பது இயற்கை. இதனைப் புலவர் பூமிக்குக் குடை பிடிப்பதாகக் கூறுகின்றார். தொடர்ச்சியாக,

"...காயடி யோதையை கண்டே வயற்
சேற்றை மீன்குதித் தறஉமான் மட்டும்
சேர்வது.."

நெற்கதிர்களை அடித்து நெல்களை உதிர்க்கும் சத்தத்தைக் கேட்ட வயற்சேறுகளில் உள்ள மீன்கள் துள்ளுவதை, அவை ஆகாயத்தில் கார்த்திகை நட்சத்திரம் உள்ள இடம் வரை செல்லும் என இயற்கை நிகழ்வில் தன்கருத்துக்களை ஏற்றி அழகாகப் பாடியுள்ளார்.

**நிறைவுரை**

மேற்குறிப்பிட்ட வகையில் யாப்பிலக்கணமும் அணியிலக்கணமும் விரவப்பெற்று அழகாகப் படைக்கப்பட்டு அடிநிலை மக்களின் வாழ்வியலைச் சிறப்பாக எடுத்தியம்பும், காலத்தால் அழியாத கலங்கரை விளக்கமாக பறாளை விநாயகர் பள்ளு அமைந்துள்ளது என்பதில் எந்த ஐயமும் இல்லை.

**துணைநூற்பட்டியல்**

சின்னத்தம்பிப்புலவர் (2016)பறாளை விநாயகர் பள்ளு பதிப்பு பிரதேச செயலகம் சங்கானை

கலாநிதி துரை மனோகரன் (1999) பள்ளு இலக்கியமும் பாமரர் வாழ்வியலும் வெளியீடு இந்துப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.

முனைவர் ய. மணிகண்டன் (2001) தமிழில் யாப்பிலக்கண வளர்ச்சி விழிகள் பதிப்பகம்

முனைவர் தெ.ஞானசேகரன்(206) பள்ளு இலக்கியம் பாரதிக்கு வெளியே பதிப்பு. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.